# செந்தாரப்பட்டி பேரூராட்சி – சேலம் மாவட்டம்

## ஒப்பந்தபுள்ளி விளம்பரம்

**ந.க.எண்:367/2021** **நாள்:05.04.2022**

சேலம் மாவட்டம், செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி 2021–2022ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு டைய்டு மான்ய திட்டத்தில் கீழ், கீழ்கண்ட வேலை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **21.04.2022ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணி வரை** பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து, உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அதற்கான தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண்.4ல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகையினை செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி, அதற்கான செலுத்துச்சீட்டினை இணைத்து 21.04.2022ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் வரப்பெற்ற **ஒப்பந்தப்புள்ளிகள் 21.04.2022 அன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு** பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாயில்) | முன்வைப்பு தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நமுனா விற்பனை வரித்தொகை உட்பட ரூ. | பணி முடிக்க வேண்டிய நாட்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | 2வது வார்டு புதிய காலனியில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல் | 1050000 | 21000 | 7080 | 180 |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி நமுனா, பேரூராட்சி அலுவலகத்தில் உரிய விண்ணப்பத்தின் பேரில் அலுவலக நேரத்தில் உரிய தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்பணிக்கான முன்வைப்பு தொகை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி அதற்கான ரசீதை பெற்று, ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.
3. எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட மாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள், இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகுதி அடிப்படையில் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும்.
5. மேற்படி நிபந்தனைகளின்படி, வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.
7. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

8. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ.50/– மதிப்புள்ள முத்திரைதாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் M.D.S.S மற்றும் S.S.R.T ன்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டியது. தவறினால் வேலை உத்திரவு இரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

9. இப்பணிகளில் தரைமட்டப் பணிகள் நடைபெறும் பொழுது **குடிநீர்த்திட்ட பைப்லைன் மற்றும் தொலைதொடர்பு கேபிள்கள் பழுதுபட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து** துறைக்கு ஒப்படைக்க வேண்டியது, நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.

10. பேரூராட்சிகளின் உதவிப் செயற்பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளின் கட்டளைப்படி வேலையினை M.D.S.Sன்படி (Madras Detailed Standard Specification) திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.

11. வேலை முடிவுற்றப்பின் சம்பந்தப்பட்ட பொறியாளர்களால் அளவு, மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக்கெடுவிற்குள் வழங்கப்படும்.

12. மொத்த வேலையின் மதிப்பில் வருமான வரி 2 சதவீதம், அதற்கு மேல் வரி 18 சதவீதம், பொது விற்பனை வரி 2 சதவீதம் மற்றும் கூடுதல் வைப்பு நிதி மீதி 3 சதவீதம் கட்டிடத் தொழிலாளர் நல வாரிய சந்தாத் தொகை 1 சதவீதம் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தலைப்புகளில் செலுத்தப்படும்.

13. இப்பணிகளுக்கான முன்பணங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படமாட்டாது.

14. அட்டவணை ஒப்பந்தப்புள்ளிகள் அடித்தல், திருத்தங்கள் இருந்தால் அந்த இடத்தில் ஒப்பந்ததாரரால் சுருக்கொப்பம் இட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்ததாரரின் கையொப்பம் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் செயல் அலுவலரால் நிராக்கரிக்கப்படும். உறையின் மேல் வேலையின் பெயரை குறிப்பிட வேண்டும்.

15. பொதுவாக குறைந்த வீத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.

17. ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் நிராகரிக்கவும் பேரூராட்சி மன்றத்திற்கு உரிமை உண்டு.

18. வேலைக்கு பயன்படுத்தப்படும் பொருள்களுக்கு அரசு தொழில்நுட்ப கல்லூரியில் ஒப்பந்ததாரர் தமது சொந்த செலவில் **தரச்சான்று பெற்று** உதவி/இளநிலை பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

19. கட்டுமான வேலைகளுக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அனுமதியன்றி பேரூராட்சி பொது குடிநீர் குழாய்களிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதாரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்திய செலவிற்காக பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

20. வேலையை செய்ய ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்டுள்ள யாதொரு நபருக்கு அல்லது வேலைகளுக்க அல்லது போக்குவரத்து வாகனத்திற்கு இவ்வேலையைச் செய்யும் பொழுது ஏற்படும் சேதாரம் அல்லது தேய்மானம் ஆகியவற்றிற்கு இப்பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.

....3

21. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தணிக்கை மறுப்புகளையோ, அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டி இருப்பின், ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத்தொகை சரி செய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுள்ள தொகைக்கு பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் கால அளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததரர்கள் கட்டுப்பட்டவர்கள்.

22. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள் ஒப்பந்தத்திற்கு விடக்கூடாது.

23. உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.

24. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே, மேற்படி வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.

25. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**(ஒம்) இரா. கிருஷ்ணசாமி**
**செயல் அலுவலர்**
செந்தாரப்பட்டி சிறப்புநிலை பேரூராட்சி
சேலம் மாவட்டம்.

**பெறுதல்:**

அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்
செந்தாரப்பட்டி பேரூராட்சி.

**நகல்:**

1. உதவி இயக்குநர் பேரூராட்சிகள் துறை, சேலம் மண்டலம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் துறை, சேலம் மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. இளநிலை பொறியாளர், தம்மம்பட்டிபேரூராட்சி (தொகுப்பு) அவர்களுக்கு தகவலுக்காக அணுப்பப்படுகிறது.
4. அலுவலக விளம்பர பலகைக்கு.